OS.No.420/2023 – 10.06.2025

PW1 – முருகேசன்

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வாதி சங்கத்தில் நான் என்ன பொருப்பில் இருக்கிறேன் என்றால் மாநில தலைவராக இருக்கிறேன். வாதி சங்கம் என்ன நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டது என்றால் அருந்ததியர் மக்கள் பிற்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லி அவர்களை முன்னேற்றுவதற்காக உருவாக்கப்பட்டது. வாதி சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் பதிவு சான்றிதழ் அசல் என்னிடம் இல்லை என்றால் சரி.

சங்கம் எங்கே பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சேலம் அம்மாபேட்டை பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. எந்த வருடம் பதிவு செய்யப்பட்டது என்றால் 1991ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யும்போது நான் என்ன பொருப்பில் இருந்தேன் என்றால் வீரமணி என்பவர் மாநில தலைவராக இருந்தார், நான் பொருப்பில் இல்லை, சங்கத்தில் நான் உறுப்பினராக இருந்தேன். வாதி சங்கத்தில் மாவட்ட வாரியாகவும் மாநில வாரியாகவும் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படலாம் என்று பைலாவில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. வாதி சங்கத்தை

எந்த சட்டப்படி பதிவு செய்தேன் என்றால் தெரியாது. சங்கத்தை முதன்முதலில் 1977ல் பதிவு மதுரையில் பதிவு செய்தோம் என்றால் சரி. பின்னிட்டு 1991ல் சேலத்தில் அதே பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. இந்த இரண்டு சங்கமும் ஒரே உறுப்பினர்களால் பதிவு செய்யப்பட்டது என்பதை காண்பிக்க எந்தவித ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சங்கத்தை பதிவு செய்யும்போது துணை விதிகள் என்னவென்று சொல்லிதான் பதிவு செய்யப்பட்டதா என்றால் நான் பார்க்கவில்லை. வழக்கை எதற்காக தாக்கல் செய்துளளேன் என்றால் இதற்கு முன்பாக இருந்த மாநில தலைவர் வீரமணி இறந்துவிட்டதால் என்னை மாநில தலைவராக உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லும் என்று கோரி தாவா தாக்கல் செய்துள்ளேன்.

மாவட்ட பதிவாளரின் மேற்பார்வையில் துணை விதிகளுக்கு உட்பட்டு தேர்தல் நடக்கவில்லை என்றால் அவர்களின் மேற்பார்வையில்தான் தேர்தல் நடந்தது. எந்த தேதியில் தேர்தல் நடந்தது என்றால் வீரமணி உயிருடன் இருந்தபோது தேர்தல் நடைபெற்றது. வீரமணி இறந்தபிறகு தேர்தல் நடக்கவில்லை. வீரமணி இறந்தபிறகு மாவட்ட பதிவாளருக்கு முறையாக தேர்தல் நடக்க வேண்டும் என்று நான் மனு கொடுக்கவில்லை என்றால் சரி.

1,2 பிரதிவாதிகள் யார் என்றால் அவர்கள் யார் என்று எனக்குத்

தெரியாது. எதற்காக அவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வீரமணி இறந்தபிறகு சங்கம் எங்களுக்கு சொந்தமானது என்று மனு கொடுத்திருந்தனர். அதனால் அவர்களுக்கு எதிராக நான் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன். 1,2 பிரதிவாதிகள் கொடுத்த எதிர்ப்பு மனுவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. 1,2 பிரதிவாதிகளை சங்க நிர்வாகிகளாக நியமித்து எந்த உத்தரவும் 3ம் பிரதிவாதியால் எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை என்றால் சரி. சங்கத்தில் எத்தனை உறுப்பினர்கள் உள்ளார்கள் என்றால் தமிழ்நாடு முழுவதும் உள்ளார்கள், எத்தனை பேர் உள்ளார்கள் என்று தெரியாது. சங்க உறுப்பினர்களிடம் சந்தா பெறப்படுகிறதா என்றால் வீரமணி தலைவராக இருந்தபோது வாங்கினார். அதற்கு பின்பு வழக்கு தாக்கல் செய்துள்ளதால் சந்தா இதுவரை வாங்கவில்லை. சங்க விதிகளின்படி நான் மாவட்ட பதிவாளரிடம்தான் முறையிட்டு பரிகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் சங்கம் யாருக்கு சொந்தமானது என்று கோரி இந்த நீதிமன்றத்தில் பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல.

தீர்மானம் போட்டு என்னை தேர்ந்தெடுத்ததாக முதல் விசாரணையில் கூறி உள்ளேன், அதற்கான ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1,2 மற்றும் 8 புத்தகங்களில் கையெழுத்து

செய்த உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகளின் விவரங்கள் ஏதும் அதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. அதை குறிப்பிட்டு கூறும் வகையில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக ஏற்கனவே சேலம் 3வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.42/2016 வழக்கு நடந்ததா என்றால் ராஜேந்திரன், நாகலிங்கம் என்பவர் மீது தாக்கல் செய்து அது 31.03.2022 அன்று தள்ளுபடி ஆனது என்றால் சரி. நாகலிங்கம் என்பவர் யார் என்றால் அவரும் சங்க உறுப்பினர். பிற்காலத்தில் அவர் சங்கத்திலிருந்து நீக்கப்பட்டார்.

சங்க துணை விதிகள் பற்றி எனக்கு தெரியவில்லை என்றும் தேர்தல் நடந்ததா இல்லையா என்றும் தெரியவில்லை என்றும் சங்கத்தில் என்னுடைய பொருப்பு என்ன என்பதற்கு எந்தவித ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றும், எனவே சங்கம் எனக்கு சொந்தம் என்று கோரி விளம்புகை பரிகாரம் கோர எனக்கு முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல. நான் 3ம் பிரதிவாதியிடம்தான் எந்த ஒரு பரிகாரத்தையும் நான் பெற்றுக்கொள்ள முடியும் என்றால் சரியல்ல.

3ம் பிரதிவாதி தரப்பில் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது. Sd/- S.Sumathy,

Principal District Judge, Salem.